[1979 அக்டோபர் 31

படுகிறார்கள். அதே நேரத்திலே இரண்டு கண்களும் தெரியாத மாணவர்கள் பிரசிடென்சி கல்லூரியில் தங்கிப் படித்துவிட்டு தங்குவதற்கு இடம் இல்லாமல் மழையில் சிரமப்படுகிறார்கள். அவர்களுக்கு இடம் அளிக்கும் வகையில், எஸ்டேட் ஆபீஸ் உட்புறத்தில், எம்.எல்.ஏ. ஹாஸ்டல் உட்புறத்திலே பிற்பட்ட மாணவர்கள் தங்கியிருக்க விடுதி கட்டிக் கொடுப்பதை அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு தலைவரவர்களே, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு கட்டிடம் கட்டவும், விடுதிகள் கட்டவும் அரசு பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறது. எங்கே, எப்பொழுது கட்டுவது என்பதை ஆராய்ந்து கொண்டிருக்கிறது அரசு. விரைவிலே முடிவு செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்கு பக்கத்திலே ஒரு இடத்தைக் குறிப்பிட்டு, அங்கே கட்டலாம் என்று சொல்லி இருக்கிறார். அதைப் பற்றிப் பரிசிலிக்கலாம்.

திரு. தீ. சு. நல்லதம்பி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கட்டிடம் கட்டுவது பரிசீலனையில் உள்ளதாக சொல்கிறார். 2, 3 ஆண்டுகளாக இப்படித்தான் சொல்லி வருகிறார். பரிசீலனை எப்பொழுது முடிவாகும்?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, 2, 3 ஆண்டுகளாக இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்வது தவறு. இதுவே இப்பொழுதுதான் அரசினுடைய பரிசீலனைக்கு வந்திருக்கிறது.

ஒன்றிய அளவில் தொழிற்பயிற்சி நிலையங்கள்.

*வினா 47—திரு. கே. சௌந்திரராசன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கி சுய வேலை வாய்ப்பை உருவாக்கும் வகையில் தொழிற்பயிற்சி நிலையங்களை ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் உருவாக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: புதிதாக ஒரு தொழிற்பயிற்சி நிலையம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஆரம்பிக்கும் உத்தேசம் அரசுக்கு தற்போது இல்லை.

1979 அக்டோபர் 31]

திரு. கே. சௌந்திரராசன்: மாண்புமிகு தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செல்லுகிற இடங்களில் எல்லாம் மாணவர்களிடையே பேசும்போது, மாணவர்கள் செல்ப்–எம்ப்லாய்மென்ட்டைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். அவர்கள் ஜாப் கிரியேட்டர்களாக இருக்க வேண்டும். ஜாப் சீக்கர்களாக இருக்கக்கூடாது என்று இத்தகைய ஒரு நல்ல கருத்தைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். இந்த நேரத்திலே வெறும் பி. ஏ., பி. எஸ்ஸி. பட்டதாரிகளை, வேலை இல்லாமல் இருக்கிற பட்டதாரிகளை தொடர்ந்து உருவாக்காமல், ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்திட வாய்ப்பாக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஒரு தொழிற்கல்வி நிலையத்தை அமைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, ஒரு புதிய தொழிற்பயிற்சி நிலையம் அமைப்பது என்றால் 30, 32 இலட்சம் செலவாகும். இப்பொழுது பயிற்சி பெற்றவர்களே, ஏற்கனவே 32,000 பேர் வேலை இல்லாத நிலையிலே, வேலை வாய்ப்பு நிலையங்களிலே பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும் அதிகமான அளவிலே தொழிற்பயிற்சி நிலையங்களை அமைப்பது சரியாக இருக்காது. நாங்கள் ஜாப் கிரியேட்டர்ஸ் என்று சொன்னது, படித்தவர்கள் அனைவரும் வேலைக்குத்தான் போகவேண்டுமென்கிற எண்ணத்தை வளர்த்துக் கொள்ளக் கூடாது. அந்த அளவுக்கு கல்வியிலே மாறுதல் செய்ய வேண்டுமென்று. அந்தக் கருத்தைத்தான் இந்த அரசு கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே பாலிடெக்னிக், என்ஜினீயரிங் போன்ற கல்வி பெறும் மாணவர்களுக்கு மானேஜ்மென்ட் டிரெயினிங் தரலாமா என்று இருக்கிறோம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற் பயிற்சி நிலையம் ஒன்றியத்திற்கு ஒன்று ஆரம்பிப்பது அதிகச் செலவாகும் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஏராளமான மாணவர்கள் தொழிற் பயிற்சியில் சேருவதற்கு நாட்டம் காட்டும் நிலை இருக்கிறது. ஆகவே, ஒன்றியத்திற்கு ஒன்று என்று இல்லாவிட்டாலும், மாவட்டத்திற்கு இரண்டு என்று இருப்பதை மூன்று அல்லது நான்கு என உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா? இருக்கின்ற பயிற்சி பள்ளிகளிலேயே அதிக மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் வகையில் எண்ணிக்கையை உயர்த்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, மாநிலத்திலுள்ள தேவைகளை ஒட்டி நாம் இந்த யோசனைகளைப் பரிசீலிக்கலாம்.